**தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்திற்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இகநி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் 06 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து விடுபட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழிகாட்டலின் பிரகாரம் 6 ஆம் பந்தியிலே அறிக்கைப்படுத்தலின் அடிப்படையில் காட்டப்பட்டுள்ள கணக்குகளின் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டலின் 06 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மாதிரிப் பத்திரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள், திறைசேரி புத்தகங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படாததன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் அனைத்து வருமானங்களும் அல்லாத பெறுவனவுகள் ரூபா 3,083,835 வினால் மற்றும் அனைத்து செலவுகள் ரூபா 1,223,134 வினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முற்பணங்களினால் கொடுப்பனவுகள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ரூபா 1,207,114 மற்றும் ரூபா 16,020 மேற்கொள்ளப்பட்ட குறுக்கு பதிவுகள் என்பதாக | வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையில் சொத்துக்கள் அறிக்கையிடப்படவில்லை என்பதுடன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் மீதிகளுடன் இணங்குவதற்கு முடியாது உள்ளது. | மறுமொழி வழங்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகள் நாளதுவரையாகப் பேணப்பட வேண்டும். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே தனிநபர் படிகள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 71,814,214 ஆக காணப்பட்ட போதும், அது ரூபா 72,191,633 ஆக ரூபா 377,419 கூடுதலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 393,439 வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 16,020 புகையிரத சேவையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு உரிய ரூபா 377,419 குறுக்கு பதிவுகள் வேறுபாட்டிற்கு காரணம் என்பதாக | காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சரியான தகவல்கள் உள்வாங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச கணக்குகள் திணைக்களத்தின் ஊடாக வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ள பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள், திறைசேரியினால் வெளியிடப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுடன் இணங்கியிருக்க வேண்டியதுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடும் பொறுப்பும் முன்னைய வருடத்தின் செலவொன்றாக 2021 ஆம் ஆண்டிலே தீர்ப்பனவு மேற்கொள்ளப்படக் கூடாத போதிலும், ரூபா 442,505 ஆன பொறுப்புக்கள் 2021ஆம் ஆண்டிலே தீர்ப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| **பொது நிர்வாக சுற்றறிக்கைகள்** | | | |
| (அ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க, 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் | மீளாய்வாண்டிலே அலுவலக உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் ஒன்று | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். | 2021 சனவரி மாத 01 ஆந் திகதியில் இருந்து உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை கைவிரல் அடையாள இயந்திரமொன்றின் மூலம் அடையாளப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | படுத்தப்படுவதாக |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | சாதாரண கடமை நேரங்களின் பின்னர் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு உரிய காலத்தை விரல் அடையாள குறிப்புக்கள் இயந்திரத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டிலே வரவுக் கொடுப்பனவு மற்றும் பயன்படுத்தப்படாத விடுமுறைக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த அலுவலக உத்தியோகத்தர் களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் 2020 வருடத்திலே அடையாளப் படுத்துவதற்காக பொது 18 மாதிரிப் பத்திரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வரவுப் பதிவேட்டின் மூலம் மேற்கொள்ளப் படுவதாக மற்றும் வரவுப் பதிவேடு அதிகார பலம் உள்ள உத்தியோகத் தர் ஒருவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் போதிய அளவு கட்டுப்பாடுகளுடன் மேற்கொள்ளப் படுவதாக |